# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



8.) PP Approval Letter

a.) A2/236/2022
14.05.2022

(19)

தமிழ்நாடு அரசு

மாவட்ட நகர் ஊரமைப்பு த்துறை உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர்

கரூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.க.மூக்கையா பி.இ,எம்டெக்.,

---

ந.க.எண்.34/2020/காபுநவகு, நாள். 13. 05.2022

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கரூர் மாவட்டம் - காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் - புகளூர் நகராட்சி - புஞ்சை புகளூர் வடக்கு கிராமம் - சர்வே எண்.550/1 -ல் 9.05 ஏக்கர்) 36605ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

புகளூர் நகராட்சி அலுவலகம்
14 MAY 2022
கரூர் மாவட்டம் - 639

பார்வை :

1) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8995/2020/TCP2, நாள்.28.01.2022.
2) மனுதாரர்கள் திரு.P.முருகன் மற்றும் 2 நபர்கள், ஆகியோர்களின் இணையதள விண்ணப்பம் நாள்.15.05.2020.
3) உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் ந.க.எண்.35/2020/காபுநவகு, நாள்.04.07.2020 மற்றும் இவ்வலுவலகக் கடித எண். நாள்.28.09.2020.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8995/2020/TCP2, நாள்.21.10.2020.(சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதலளிக்கப்பட்டது)
5) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
6) செயல் அலுவலர், புன்செய்ப்புகளூர் பேரூராட்சி, கரூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண்.115/2020/அ2, நாள்.22.07.2021.
7) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(யுடி4(1)) துறை, நாள்.04.06.2004.
8) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017.
9) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை, நாள்.31.01.2020
10) அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD(1)துறை, நாள்.23.09.2020.
11) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(யுடி4(1) துறை, நாள்.09.12.2020.
12) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.30.12.2020.
13) நகர் ஊரமைப்பு ஆணையாளர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2021.
14) இவ்வலுவலகக் கடிதம் இதே எண். நாள்.23.02.2022. (கட்டணங்கள் செலுத்தக் கோரி)
15) மனுதாரர் அவர்களின் விண்ணப்பம் கட்டணம் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்ட நாள்.28.02.2022.
16) தலைவர் / மாவட்ட ஆட்சியர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம் கூட்டப் பொருள் எண்.02, தீர்மானம் எண்.02, நாள்.29.04.2022

கரூர் மாவட்டம், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், புகளூர் நகராட்சி, புஞ்சை புகளூர் வடக்கு கிராமம், சர்வே எண்.550/1 -ல் 9.05 ஏக்கர்) 36605 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்கி பார்வை(1) -ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.இ எண்.134/2021** இசைவு அளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, பார்வை (16) ல் கண்ட தலைவர்/ மாவட்ட ஆட்சியர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம் கூட்டப் பொருள்எண்.02, நாள்.29.04.2022 -ல் ஒப்புதல் பெற்றப்பட்டதற்கிணங்க, மாவட்ட நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர் அவர்களால் **திட்ட அனுமதி எண்.09/2022** என எண்ணிடப்பட்டுள்ளதன் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

1) பார்வை(2)-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை(4)-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள். 21.10.2020 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை(6)-ல் கண்ட மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்கள். 523/2021 மற்றும் 524/2021, நாள்.26.03.2021-ல் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2) பார்வை(4)-ல் சுட்டிய இவ்வலுவலக சுற்றிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப்பதிரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
3) மனைப்பிரிவு நிபந்தனை எண்.15-ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்த வெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதின்படி ஆணையாளர், புகளூர் நகராட்சி அவர்கள் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 18(இ), 18(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்ம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
4) மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்தும் (Quality of Roads) உள்ளாடசியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆணையாளர், புகளூர் நகராட்சி அவர்களிடமிருந்து சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
5) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்18(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
7) செயலானைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை புகளூர் நகராட்சி அவர்கள் உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

21

<u>சிறப்பு நிபந்தனைகள்</u> :

1) மனைப்பிரிவில் தார்சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம் மற்றும் அணுகுசாலை விஸ்தாரிப்புப் பகுதி, பூங்கா இடம் ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, மழைகால் துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதைனையும் இட நேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் இம்மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குவதை உள்ளாட சிக்குத் தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.
2) பார்வை(5)ல் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறையில் சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
3) பார்வை (12)ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the Real Estate project woth the Real Estate Regulatory Authority "
4) பார்வை 7 மற்றும் 9 ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை (i) நன்னிலை கட்டணம் ரூ.65,000/- மற்றும் (ii) வளர்ச்சிக் கட்டணம் ரூ.40,000/- நாள்.24.02.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும், கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

13/3/2022

உறுப்பினர் செயலர்/உதவி இயக்குநர்,
காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
கரூர் மாவட்டம்.

13/03/22

<u>இணைப்பு</u> :
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ஒப்புதல்
அளிக்கப்பட்ட வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின் நகல் (2 நகல்கள்)

**பெறுநர்**
ஆணையாளர்,
புகளூர் நகராட்சி, கரூர் மாவட்டம்.

**நகல்**
1) மனுதாரர்
திரு.P.முருகன் மற்றும் 2 நபர்கள்,
எண்.18, செம்படபாளையம் தெரு,
புகளூர் சர்க்கரை ஆலை,
புகளூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.
( பத்தி ஒன்று மட்டும்)

2) தொழில்நுப்ப வைப்பறைக்கு - வரைபடம் மற்றும் நிபந்தனை - 1

23

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்**

| விவரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 36605.00 சமீ (அல்லது) 9.05 ஏக்கர் |
| ஒதுக்கிய மனைகள் | - | 205 மனைகள் (EWS மனைகள் உட்பட) |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரர் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | - | உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| பூங்கா-I<br>பூங்கா-II<br>புல்வெளி (கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி) | -<br>-<br>- | 2302.33 சமீ } 2939.49 சமீ<br>637.16 சமீ } (10.57%)<br>277.46 சமீ (0.99%) |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 8803,29 சமீ (24.04 %) |
| 3. பேரூராட்சிக்கான ஒதுக்கீடு | - | 147.02 சமீ (0.52%) |
| 4. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 183.87 சமீ (0.66%) |
| விற்பனைக்குரியவை<br>EWS மனைகளின் பரப்பு<br>மனை எண்கள் | <br>-<br>- | <br>3337.56 சமீ (10.15%)<br>77-85. 110-127, 139-149. 166-179, 181-193, 196-204 |

(ஒம்/-)எ.சரவணவேல்ராஜ்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

29/01/22
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

29/01/2022

25

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை, சென்னை

கோப்பு எண்.8995/2020/TCP-2 நாள்:28.01.2022

பெறுநர்
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

**மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.134/2021**

---

**மனைப்பிரிவு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய செயல் அலுவலர், புன்செய்ப்புகழூர் பேரூராட்சி, கரூர் அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையின் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் இசைவு (Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.
ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார செயல் அலுவலர், புன்செய்ப்புகழூர் பேரூராட்சி, கரூர் அவர்களின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

8) Local body Approval Letter 27

<u>கரூர் மாவட்டம், புகழூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்</u>

<u>முன்னிலை :- திரு.கு.கனிராஜ், பி.ஏ.,பி.எல்,</u>

ந.க.எண். 236/2022/அ2 நாள்: 20.06.2022

பொருள்:- மனைப்பிரிவு வரைபட அனுமதி–கரூர் மாவட்டம்– புகழூர் நகராட்சி – புல எண்.550/1 – 3.66.5 ஹெக்டேர் (9.05ஏக்கர்) பரப்பில் அமைந்துள்ள 1 முதல் 205 வரையான மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது – இறுதி ஒப்புதல் வழங்குதல் –தொடர்பாக.

பார்வை:-

1. திரு.P. முருகன் மற்றும் இருவர் செம்படாபாளையம் அவர்களின் விண்ணப்பம் நாள். 15.05.2020.
2. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், (மு.கூ.பொ) சென்னை அவர்களின் ந.க.எண். 8995/2020/TCP-2 நாள். 21.10.2020
3. உறுப்பினர் செயலர்/உதவி இயக்குநர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம்,கரூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 34/2020 கா.பு.ந.வ.கு நாள். 13.05.2022
4. 26.03.2021 ம் தேதிய நன்கொடை ஆவண பத்திரம் எண். 523/2021
5. திரு.P. முருகன் மற்றும் இருவர் செம்படாபாளையம் அவர்களது விண்ணப்பம் நாள். 18.05.2022.
6. நகர் மன்ற தீர்மான எண். 67/2022, நாள்.31.05.2022
7. தொடர்புடைய ஆவணங்கள்.

* **** *

<u>உத்தரவு :-</u>

கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புகழூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18 புன்செய்ப்புகழூர் வடக்கு கிராமம் புல எண். 550/1ல் – 3.66.5 ஹெக்டேர் (9.05ஏக்கர்) பரப்பளவில் மனைப்பிரிவு அமைப்பதற்கு அனுமதி கோரி திரு.P. முருகன் மற்றும் இருவர் என்பவரின் விண்ணப்பத்தின் பேரில் உத்தேச மனை பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடத்திற்கு சென்னை நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களால் பார்வை (2) ல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2. மேற்படி ஒப்புதல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி உத்தேச மனைபிரிவில் மனுதாரரால் தார் சாலை, கழிவு நீர் வடிகால், குடிநீர் குழாய் மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி தார்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வேலாயுதம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 523/2021 நாள். 26.03.2021ன் படி நன்கொடை ஆவணம் மூலம் முந்தைய புன்செய்ப்புகழூர் பேரூராட்சிக்கு (தற்போது நகராட்சி) ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

..2..

3. அதனைத் தொடர்ந்து மேற்படி உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.இ.எண். 134/2021 நாள். 13.05.2022 என எண்ணிடப்பட்டு பார்வை (3) – இல் காணும் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

4. பார்வை (5) ல் காணும் கடிதத்தில் மனுதாரர், பார்வை (2) ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதன் படி பார்வை (6) ல் காணும் இந்நகர் மன்ற தீர்மானத்தில் மேற்படி உத்தேச மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க இசைவளித்துள்ளது. எனவே பார்வை (3) காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, புன்செய்ப்புகழூர் வடக்கு கிராமம் புல எண் 3.66.5 ஹெக்டேர் (9.05ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 1 முதல் 205 வரை (EWS மனைகள் உட்பட) உள்ள மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது. இத்துடன் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

5. மேற்படி மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு மாறாக செயல்படும் பட்சத்தில் இந்த உத்தரவு தானே இரத்தாகிவிடும்.

PUGALUR MUNICIPALITY
Karur District
639 117

(கையொப்பம்) 20/06/2022
ஆணையர்,
புகழூர் நகராட்சி,
கரூர் மாவட்டம்.
20/6/2022

இணைப்பு :- வரைபடம் மற்றும் நிபந்தனைகள்–1

<u>பெறுதல் :-</u>

திரு. திரு.P. முருகன் மற்றும் இருவர்
எண்.18 செம்படாபாளையம் தெரு,
புகழூர் எஸ்.எப்,
கரூர் மாவட்டம்

நகல் :- உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம், கரூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேலாயுதம்பாளையம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate